# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC . No . 143/2017 L.W.1 P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சித்ரா | Caste | : |
| Father/Husband Name | : ராஜவேல் | Calling | : |
| Village | : மேலூர் | Religion | : |
| Taluk | : திட்டக்குடி | Age | : 30 |
| District | : கடலூர் | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 24.02.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**இரு எதிரிகளும் ஆஜரில்லை, கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்ப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் மேலூர் கிராமத்தில் மேட்டுத்தெருவில் குடும்பத்துடன் வசித்து விவசாயவேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 முத்துசாமி என் மாமனார் ஆவார். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 6 மற்றும் தேவேந்திரன், இளமதி தெரியும். அவர்கள் தான் என்னை சண்டை பிடித்து அடித்தார்கள். (எதிரிகள் ஆஜரில்லை.) கடந்த 01–07–2017 ம் வருடம் இரவு 8.00 மணிக்கு நானும், எனது மாமனார் முத்துசாமியும் தின்னையில் உட்கார்ந்திருந்போது மணி மற்றும் தேவேந்திரன் அங்குவந்து கல்லாலும், மண்ணாலும் அவர்கள் இருவரும் என்னை அடித்து தேவடியா, குச்சிகாரி என அசிங்கமாக திட்டி நான் அந்த சயமத்தில் ஏழு மாத கர்பிணியாக இருந்ததால் யாருக்குடி பிள்ளை வாங்கினாய் என திட்டி, மணி தன்னுடைய ஜட்டியை கழற்றிவிட்டு என்ன பன்னமுடியும், எதுவும் பன்னமுடியாது ஆட்டமுடியாது என அசிங்கமாக திட்டினார். தேவேந்திரனும், மணியும் வாங்கடி உங்களை கேட்க யாரு இருக்கிறார்கள், உடன் நானும், எனது மாமனாரும் வந்தவுடன் தேவேந்திரன் என்னுடைய முடியை இழுத்துப்போட்டு எனது வயிற்றில் உதைத்துவிட்டார். உடன் எனது மாமனார் சம்வத்தை பார்த்த எனது மாமனார் எனது மருமகளை உதைத்துவிட்டியா என கேட்குபோனதற்கு அவரின் இடது கட்டை விரலை தேவேந்திரன் கடித்ததாக சொல்லி நீதிமன்றத்தில் சாட்சி தன்னுடைய வலது கட்டை விறலை காண்பித்து கடித்து கொதறி விட்டார்.

2.தேவேந்திரன் என்னை குச்சியால் மண்டையில் அடித்து ரத்தம் வந்தது. சாட்சி தன்னுடைய நெற்றியில் கைவைத்து காண்பிக்கிறார். அடிபிடி நடந்ததால் பரமசிவம், மகேந்திரன் ஆகியோர்கள் ஓடிவந்து அந்த குடும்பத்தை அடித்து கொள்ளுறீங்களே யாரும் கேட்க ஆள்ளில்லையே என சொன்னதால் உனக்கு என்னடா இங்க வேலை நீ ஏன் வர என்று அந்த நான்கு பேரும் அதாவது தேவேந்திரன், மணி, இளமதி, லட்சுமி ஆகியோர்கள் கேட்டதால் பிறகு சண்டையை அந்த பரமசிவம், மகேந்திரன் விலக்கிவிட்டார்கள். பிறகு எனது மண்டையில் ரத்ததம் கொட கொட என ஊற்றியதால் எனது மாமன் இளையபெருமாள் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு

அழைத்துச்சென்றார். எனது மாமனாருக்கும் கட்டை விறலில் கடித்து குதறியதால் அவருக்கு ரத்தம் வந்ததால் அவரையும் சிகிச்சைக்காக திட்டக்குடிஅரசுமருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். எனக்கு வயிற்று வலிஅதிகமாக இருந்ததாலும், ரத்தம் வந்ததாலும், ஏழுமாத கர்பிணியாக இருந்ததாலும் மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தார்கள். எனது உடலில் ரத்தம் குறைவாக இருந்ததால் ரத்ததம் ஏற்றினார்கள்.

3 எனது மாமனாருக்கு கட்டை விறலில் ஓர் ஆண்டுகாலமாக காயம் ஆறாமல் இருந்ததால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை மேற்க்கொண்டோம். நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது அங்கு உதவி ஆய்வாளர் வந்து என்னை விசாரித்தபோது நான் நடந்ததை சொன்னேன். பின்பு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம், அதில் உள்ள கையொப்பம என்னுடையது ஆகும். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிஸார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தனர். வழக்கு சம்பவத்திற்கு பிறகு நீங்க என்ன கேஸ் கொடுத்தீங்களா போலிஸ், வக்கீலிடம் பணம் கொடுத்துவிட்டு நான் இப்போது வெளியே வந்துவிட்டேன். உன்னால் என்ன பன்ன முடியும். உன்னை கொன்று போட்டாலும் இப்ப கேட்க யார் ஆளு, சாட்சி சொல்ல யார் ஆளு, யாரும் வரமாட்டார்கள். சண்டையை விலக்கிவிட்டவர்களான பரமசிவம், மகேந்திரன் ஆகியோர்கள் வயதானவர்கள். மகேந்திரனுக்கு வயது 40 அவர்களையும் சாடினார்கள். மகேந்திரனும், பரமசிவமும் எங்களை பாடினார்கள் நாங்கள் சாட்சி சொல்ல வரமுடியாது. கோபித்துக்கொள்ள வேண்டாம் ஒரு குடும்பத்தை காப்பாற்ற வேண்டி சண்டையை விலக்கவிட்டோம். போலிஸார் வந்துகேட்டபோது நாங்கள் சாட்சி சொல்ல வரமுடியாது என்று மகேந்திரனும், பரமசிவமும் கூறினார்கள். எனது மாமனார் தற்போது உயிருடன்இல்லை. என்னை ஆஜரில்லா எதிரிகள் அடித்தால் கேட்பதற்கு ஆள் இல்லை பயமாக உள்ளது.

**எதிரிகள் ஆஜரில்லை, வழக்குரைஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது வீட்டிற்கு மேற்குபக்கம், கிழக்குபக்கம் ஏரி உள்ளது நடுவில் நாங்கள் உள்ளோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் போலிஸாரிடமும் சொல்லியுள்ளேன். நான் எட்டாம் வகுப்புவரைபடித்துள்ளேன். கையெழுத்தை நான் தமிழில்தான் போடுவேன். **அ.சா.ஆ.1** புகாரை உதவி ஆய்வாளர்தான் எழுதிக்கொண்டார். நானும், எனது மாமனாரும் ஒரே இருச்சக்கர வாகனத்தில தான் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். இந்த இருச்சக்கர வாகனத்தை இளையபெருமாள் ஓட்டினார்.

2. சம்பவ இடத்திற்கும், திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கும் இடையே 9 அல்லது 10 கிலோமீட்டா் இருக்கும், காட்டுப்பதை வழியே சென்றால் சுமார் அரை மணிநேரத்தி செல்லலாம். அந்த இருச்சக்கர வாகனத்தை இளைபெருமாள்தான் ஓட்டினார் என போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். காயம்பட்ட பிறகு ஆதமங்கலம், வாய்க்கால் கரை, பெருமுளை வழியாக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இந்த சாலையானதுவாய்க்கால் க்றைவரை

கரடுமுரடாக இருக்கும் என்றால் சரிதான். பெருமுளைக்கு பிறகு சாலையானது சாதாரணமாக உள்ளது. சிகிச்சை மேற்க்கொள்ளும்போது மருத்துவரிடம் நான்கு நபர்கள் தாக்கியதாக சொன்னேன். நான் இப்போதும் நான்கு நபர்கள் தாக்கியதாக சொல்கிறேன்.

3. ரத்த பரிசோதனை மேற்கொள்ளவில்லை ஆனால் மண்டையில் ரத்தம் வந்தது. வயிற்று வலி இருந்தது. கல்லு மற்றும் மண்ணால் எதிரிகள் அடித்ததாக நான் மருத்துவரிடம் சொல்லவில்லை. போலிஸார் எந்ததேதியில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சம்பவம் நடந்து நான்கு நாட்கள் கழித்து ஒரு வாரத்திற்குள் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். போலிஸார் பதிந்த வாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்தபிறகுதான் கையொப்பம் செய்தேன். அதில் நான் சொன்னபடி இருந்தது உண்மைக்கு மாறாக எதுவுமில்லை.

4.எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய ஆயுதத்தை போலிஸாரிடம் நான் காண்பிக்கவில்லை நான் மருத்துவ சிகிச்சையில் இருந்தேன். ரத்தக்கறை படிந்த சேலையை போலிஸாரிடம் காண்பித்தேன். போலிஸார் கைப்பற்றவில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டேன். நான் மெத்தை வீடு கட்டிய சமயத்தில்தான் எதிரி தேவேந்திரனும் மெத்தை வீடு கட்டினார். ஒரே மேத்திரி தான் இந்த இரு வீடுகளையும் கட்டினார். நான் அடிக்கடி தேவேந்திரன் வீடு கட்டிய மேஸ்த்திரியை நான் பார்ப்பது கிடையாது. இரண்டு வீடுகளையும் ஒரே சமயத்தில் தான் கட்டி முடிக்கப்பட்டது. முதலில் என் வீடுதான் கட்டி முடிக்கப்பட்டது.

5. தேவேந்திரன் வீடு நல்ல நேர்த்தியாக கட்டப்பட்ட வீடு என்றால் நான் பாக்கவில்லை எனக்கு தெரியாது. நான் கர்பிணியாக இருக்கும்போது எதிரிகள் உதைத்ததால் ஸ்கேன் போட்டு பார்த்தார்கள் குழந்தைக்கு ஒன்றும் பாதிப்பில்லை ரத்தம் குறைந்திருந்ததால் ரத்தம் ஏற்க்கொள்ள சொன்னார்கள். இந்த ஸ்கேன் ரிப்போர்டை போலிஸாரிடம கொடுத்தேன். நான் கார்ப்பமாக இருந்தது இரண்டாவது குழந்தையாகும், நான் கீரனூரை சார்ந்தவர். சம்பவத்தின்போது எனது கணவர் சிங்கப்பூரில் இருந்தார். என்னுடைய பழைய வீட்டினை இடித்த சுவர்களை ஏரியில் கொட்டியதால் எதிரி தேவேந்திரன் வகையறா அதனை கேட்டதாலும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

6. என் வீட்டைவிட எதிரி தேவேந்திரன் வீடு நேர்த்தியாக கட்டப்பட்டது என்றாலும் அதை பார்த்து நான் பொறாமை கொண்டு எசை பேசியதால் அதனை தேவேந்திரன் கேட்டதால்தான் சம்பவம் நடைப்பெற்றது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் கர்பிணியாக இருந்ததால் எனது மானார் என்னை துருப்பு சீட்டாக பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு முன்பாக சிமெண்ட் ரோடு உள்ளது. எங்கள் தெருவில் இரவு மின்கம்பங்கள் உள்ளது. எனது மாமனாரை எதிரிகள் கேள்விக்கேட்டதால் அதனை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

7. நான் சொல்வதுபோன்று சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லைஎன்றாலும் சரியல்ல. நான் ஏழு மாத கர்பிணியாக இருந்ததால் எதிரிகள் எனது வயிற்றில் உதைத்திருந்ததால் எனது குழந்தைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. காயங்களை நானே ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல., நான் நீதிமன்றத்தில் கறப்பனையாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.